முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2024 சனவரி

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2024-02-11
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**வரையறுக்கப்பட்ட ஹோப் கம்பனி, பொருள் CH** இனை உற்பத்தி செய்து அலகொன்று ரூபா 700/- வீதம் விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் நியம கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன :

| | **அலகொன்று (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள் | 240 |
| நேர் கூலி | 140 |
| மாறும் மேந்தலைகள் | 80 |

பாதிடப்பட்ட வருடாந்த நிலையான மேந்தலை ரூபா 16,320,000/-. பாதிடப்பட்ட ஆண்டொன்றிற்கான விற்பனை 75,000 அலகுகள்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இலாப – நட்டமற்ற புள்ளியையும் (BEP) பாதுகாப்பு எல்லையையும் (Margin of Safety) அலகுகளில் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) பாதிடப்பட்ட வருடாந்த விற்பனைக் கணியத்தில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தைக் **கணிக்குக.**
(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட PXL கம்பனி** ஒரு வகைப் பொருள்களை மொத்தமாக விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் கடந்த இரண்டு நிதியாண்டுகளுக்காக **வரையறுக்கப்பட்ட PXL கம்பனியின்** கணக்காளரால் தயாரிக்கப்பட்டவை ஆகும் :

| | 2022/23 | 2021/22 |
|---|---|---|
| தொக்கு இருப்புக் காலம் | 86 நாட்கள் | 74 நாட்கள் |
| வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலம் | 110 நாட்கள் | 80 நாட்கள் |
| வியாபார சென்மதிகள் புரள்வு விகிதம் | 2.92 தடவைகள் | 3.65 தடவைகள் |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2022 மற்றும் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான தொழிற்படு மூலதன சுற்றுக் காலத்தை (நாட்களில்) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) சிறந்த தொழிற்படு மூலதன முகாமைக்கான இரண்டு (02) தந்திரோபாயங்களை (strategies) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட கங்கா கம்பனி, பொருள் X** மற்றும் **Y** இனை உற்பத்தி செய்து, விற்பனை செய்கிறது. 2023 இல், **வரையறுக்கப்பட்ட கங்கா கம்பனியின்** பொருள்கள் **X** மற்றும் **Y** ஆகியன முறையே 10% மற்றும் 24% சந்தைப் பங்குகளையும் **X** இன் 280,000 அலகுகள் விற்பனையையும் **Y** இன் 375,000 அலகுகள் விற்பனையையும் கொண்டிருந்தது. 2024 இற்கு, மொத்த சந்தை அளவும் மாறாது இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், சந்தைப்படுத்தல் அணியானது பொருள்கள் **X** மற்றும் **Y** இன் **வரையறுக்கப்பட்ட கங்கா கம்பனியின்** சந்தைப் பங்குகளை முறையே 12% மற்றும் 25% ஆக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கிறது. 2023 இல், பொருள்கள் **X** மற்றும் **Y** இன் சந்தை விலைகள் முறையே அலகொன்றுக்கு ரூபா 300/- மற்றும் ரூபா 240/- ஆகக் காணப்பட்ட அதே வேளை 2024 இற்கு, பொருள்கள் **X** மற்றும் **Y** இற்கான சந்தை விலைகளை முறையே 4% மற்றும் 15% இனால் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2024 ஆம் ஆண்டிற்கான பொருள்கள் **X** மற்றும் **Y** இன் விற்பனைப் பாதீட்டை அலகுகளிலும் பெறுமதியிலும் தனித்தனியாகத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட ஹோலா கம்பனி** விசேட பொருள் ஒன்றைத் தயாரிப்பதற்கான கோரிக்கையொன்றை வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெற்றிருந்தது. இந்தப் பொருளானது **ஹோலா கம்பனி** தயாரிக்கின்ற வழமையான பொருள்களை விடவும் வித்தியாசமானது. கீழ்வரும் தகவல்கள் இந்த புதிய பொருளின் தயாரிப்புடன் தொடர்புடையவை ஆகும் :

(1) **நேர் பொருள் –** இந்தப் பொருளைத் தயாரிப்பதற்கு **பொருள் X** இன் 1,000 கிலோகிராமும் **பொருள் Y** இன் 500 கிலோகிராமும் தேவைப்படுகிறது. **பொருள் X** ஆனது சாதாரணமாக கம்பனியின் உற்பத்திகளில் பயன்படுத்தப்படுவதுடன், கிலோகிராமொன்று ரூபா 450/- விலையில் கொள்வனவு செய்யப்பட்ட **பொருள் X** இன் 3,000 கிலோகிராம் இருப்பில் உள்ளது. **பொருள் Y** ஆனது சாதாரணமாக கம்பனியின் உற்பத்திகளில் பயன்படுத்தப்படுவதில்லை என்றபோதிலும், சில மாதங்களுக்கு முன் கிலோகிராமொன்று ரூபா 800/- விலையில் கொள்வனவு செய்யப்பட்ட **பொருள் Y** இன் 800 கிலோகிராம் இருப்பில் உள்ளது.

**பொருள் X** மற்றும் **பொருள் Y** இன் தற்போதைய சந்தை விலை முறையே கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 470/- மற்றும் ரூபா 700/- ஆகும். இருப்பில் உள்ள **பொருள் X** மற்றும் **பொருள் Y** இனை பயன்படுத்தாதிருப்பின், அவற்றை முறையே கிலோகிராமொன்று ரூபா 300/- மற்றும் ரூபா 500/- விலையில் விற்பனை செய்ய முடியும்.

(2) **நேர் கூலி –** இந்தப் பொருளைத் தயாரித்து முடிப்பதற்கு 150 மணித்தியால நேர் கூலி தேவைப்படும். இது தற்போது பற்றாக்குறையாக இருப்பதால் இந்தப் பொருளைத் தயாரித்து முடிப்பதற்கு மேலதிக நேரக் கொடுப்பனவையும் செலுத்த வேண்டியேற்படும். நேர் கூலியானது மணித்தியாலமொன்றுக்கு ரூபா 600/- என்ற வீதத்தில் செலுத்தப்படுவதுடன் மேலதிக நேரக் கொடுப்பனவானது சாதாரண வீதத்தின் 1.5 மடங்காகச் செலுத்தப்படுகிறது.

(3) **ஏனைய உற்பத்திச் செலவினங்கள் –** இந்தப் பொருளைத் தயாரிப்பதற்கான ஏனைய உற்பத்திச் செலவினங்களாக மணித்தியாலத்திற்கு ரூ 800/- என்ற வீதத்தில் செலவு செய்யப்படுகிறது.

(4) வாடிக்கையாளர், இந்தப் பொருளின் விலையாக ரூபா 900,000/- இனை நிர்ணயித்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கம்பனியானது இந்தப் பொருளைத் தயாரிப்பதற்கான கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதை **மதிப்பிடுக** *(ஆதரவான கணிப்பீடுகளைத் தருக).* (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட லக்ஷி கம்பனி** என்பது 80 அறைகளைக் கொண்டுள்ள ஒரு ஹோட்டல் ஆகும். இது அதிகளவு சுற்றுலாப் பயணிகளுக்கான பெருமளவான தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இதன் செயற்பாடுகள் தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன:

(1) ஹோட்டலுக்கு வருகை தருகின்ற மாதத்திற்குரிய அறை வாடகைத் தொகையைக் கருத்திற் கொண்டு வருகைதரும் திகதிக்கு 2 மாதங்களுக்கு முன்னரே முழுத் தொகையையும் செலுத்தி அறைகள் முன்பதிவு செய்யப்படுகின்றன. 2023 டிசெம்பர் மாதம் தொடக்கம் 2024 யூன் மாதம் வரையில் 80 அறைகளிலும் ஆட்கள் தங்கியிருப்பது பற்றிய எதிர்வுகூறல் கீழே தரப்பட்டுள்ளது :

| | **டிசெம்பர் - 23** | **சனவரி - 24** | **பெப்ரவரி - 24** | **மார்ச் - 24** | **ஏப்ரல் - 24** | **மே - 24** | **யூன் - 24** |
|---|---|---|---|---|---|---|---|
| **அறைகளில் ஆட்கள் தங்கியிருக்கும் வீதம்** | 100% | 100% | 90% | 80% | 100% | 60% | 60% |

(2) அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய இருவர் தங்கக்கூடிய அறைகள் வழங்கப்படுவதுடன் ஆண்டின் வெவ்வேறு பருவங்களில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய இருவர் தங்கக்கூடிய அறைகளின் நாளொன்றுக்கான கட்டண விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | **டிசெம்பர்- 2023** | **சனவரி – பெப்ரவரி 2024** | **மார்ச் - 2024** | **ஏப்ரல் - 2024** | **மே – ஆகஸ்ட் 2024** | **செப்ரெம்பர் – நவெம்பர் 2024** |
|---|---|---|---|---|---|---|
| அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய இருவர் தங்கக்கூடிய அறைக்கான கட்டணம் - நாளொன்றுக்கு (ரூபா) | 25,000 | 25,000 | 18,000 | 22,000 | 20,000 | 15,000 |

(3) மாதமொன்றுக்கான ஊழியர் கிரயம் ரூபா 3,000,000/- ஆனது ஒவ்வொரு மாத இறுதியிலும் செலுத்தப்பட வேண்டும்.

(4) உணவு மற்றும் பானங்களுக்கான கிரயம் மாதாந்த அறை வருமானத்தில் (வருவாய்) 10% ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அது ஒரு மாத கால கடன் காலத்துடன் செலுத்தப்படுகிறது.

(5) ஏனைய மாறும் செலவினங்கள் மாதாந்த அறை வருமானத்தில் 4% ஆக இருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளதுடன் அது அதே மாதத்தில் தீர்ப்பனவு செய்யப்படுகிறது.

(6) தேய்மானம் உள்ளிட்ட மாதாந்த நிலையான செலவுகள் மாதமொன்றுக்கு ரூபா 5,500,000/- ஆக இருப்பதுடன் அவை அதே மாதத்திலேயே தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. மாதாந்த தேய்மானக் கட்டணம் ரூபா 3,000,000/-.

(7) 2024 சனவரி 01 இல் ஆரம்ப காசு மீதி ரூபா 3,000,000/-. சனவரி மாதத்திலிருந்து தரப்பட்டதொரு காலப்பகுதிக்கு ரூபா 3,000,000/- இனை காசாக வைத்திருப்பதும் மிகையாகவுள்ள காசை ஆண்டிற்கு 5% வட்டியைச் சம்பாதிக்கின்ற சேமிப்புக் கணக்கொன்றில் வைத்திருப்பதும் கம்பனியின் கொள்கையாக உள்ளது. மாதத்திற்கான வட்டியானது முந்தைய மாதத்தின் இறுதி மீதியை அடிப்படையாகக் கொண்டு வங்கியால் செலுத்தப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2024 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.**
*(2024 பெப்ரவரி மாதத்தில் 29 நாட்கள் எனக் கருதுக.)* (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ரில்லி கம்பனி** மூன்று வெவ்வேறு அளவுகளில் ஒரு பொருளை உற்பத்தி செய்து, விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது.

கீழ்வரும் தகவல்கள் பொருள்களின் நியமக் கிரய அட்டைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா (அலகொன்றிற்கு) | | |
|---|---|---|---|
| | **சிறிய அளவு** | **நடுத்தர அளவு** | **பெரிய அளவு** |
| விற்பனை விலை | 12,000 | 15,000 | 18,000 |
| பொருள் **X1** (கிலோகிராமொன்று ரூபா 6,000/- வீதம்) | 1,500 | 2,400 | 3,600 |
| பொருள் **X2** (கிலோகிராமொன்று ரூபா 1,500/- வீதம்) | 3,000 | 4,500 | 5,250 |
| நேர் கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 750/- வீதம்) | 1,500 | 1,650 | 1,875 |
| மாறும் மேந்தலைகள் | 3,200 | 1,620 | 1,850 |

| | | | |
|---|---|---|---|
| 2024 மார்ச் மாதத்திற்கான கேள்வி (அலகுகளில்) | 80,000 | 90,000 | 45,000 |

வழங்கலில் காணப்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக, 2024 மார்ச் மாதத்திற்கான வளங்களின் கிடைப்பனவு கீழ்வருமாறு அமையுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| பொருள் **X1** | 85,000 கிலோகிராம் |
| பொருள் **X2** | 520,000 கிலோகிராம் |
| நேர் கூலி | 600,000 மணித்தியாலங்கள் |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கணிப்பீடுகளின் உதவியுடன் வரையறைக் காரணி / காரணிகளை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) இனங்காணப்பட்ட வரையறைக் காரணி / காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் **கணிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**Fix PLC** என்பது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனியாகும்.

கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 80 மில்லியன் சாதாரண வாக்குரிமைப் பங்குகள் விநியோகத்தில் உள்ளதுடன் அவை ஆரம்பத்தில் பங்கொன்று ரூபா 20/- விலையில் விநியோகிக்கப்பட்டன. தற்போது பங்கொன்று ரூபா 16/- விலையில் வர்த்தகம் செய்யப்படுகிறது. கம்பனியானது பங்கொன்றுக்கு ரூபா 3.60 என்ற நிலையான பங்கிலாபத்தை வழங்குகிறது.

(2) கம்பனி ஆண்டிற்கு 22% என்ற கூப்பன் வீதத்தில், தனிச்சமொன்று ரூபா 100/- விலையில் 4 ஆண்டுகளில் மீட்கத்தக்க 16 மில்லியன் தனிச்சங்களை விநியோகித்துள்ளது. தனிச்சமொன்று தற்போது ரூபா 109/- விலையில் வர்த்தகம் செய்யப்படுகிறது.

*(வருமான வரி வீதம் 30% எனக் கொள்க.)*

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(i) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(ii) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(iii) சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி, நிறையேற்றப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் (WACC) (03 புள்ளிகள்)

(b) மூலதனக் கிரயத்தின் இரண்டு (02) முக்கியத்துவங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட நைஸ் கம்பனி, பொருள் Y** இனை உற்பத்தி செய்து, விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| **நியமக் கிரயத் தகவல்கள்** | **அலகொன்று (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள் | |
| **பொருள் A1** (1.5 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 1,500/- வீதம்) | 2,250 |
| **பொருள் A2** (2 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 4,000/- வீதம்) | 8,000 |
| நேர் கூலி (15 நிமிடங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 900/- வீதம்) | 225 |
| மாறும் மேந்தலைகள் (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 320/- வீதம்) | 80 |
| **மொத்த மாறும் கிரயம்** | **10,555** |
| விற்பனை விலை | 14,000 |
| **அலகொன்றிற்கான பங்களிப்பு** | **3,445** |

| | |
|---|---|
| காலாண்டு ஒன்றிற்காகப் பாதிடப்பட்ட விற்பனை / உற்பத்தி (அலகுகள்) | 4,500 |

காலாண்டிற்கான உண்மையான உற்பத்தி / விற்பனைக் கணியம் 4,150 அலகுகளாக இருந்ததுடன் 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான உண்மையான செயலாற்றுகையானது முகாமையால் கணிப்பிடப்பட்ட முரண்களுடன் சேர்த்து கீழே தரப்பட்டுள்ளது :

| **2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான உண்மைத் தகவல்கள்** | **ரூபா** |
|---|---|
| விற்பனை வருமானம் (4,150 அலகுகள்) | 58,373,900 |
| நேர் பொருள்: | |
| **பொருள் A1** (6,790 கிலோகிராம்) | 10,049,200 |
| **பொருள் A2** (8,960 கிலோகிராம்) | 36,180,480 |
| நேர் கூலிக் கிரயம் (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 875/- வீதம்) | 1,015,000 |
| மாறும் மேந்தலைகள் | 373,520 |
| நிலையான மேந்தலைகள் | 11,350,000 |

| | | |
|---|---|---|
| நேர் கூலி வீத முரண் | 29,000 | சாதகமானது |
| நேர் கூலி வினைத்திறன் முரண் | 110,250 | பாதகமானது |
| மாறும் மேந்தலை செலவின முரண் | 2,320 | பாதகமானது |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | 39,200 | பாதகமானது |
| விற்பனை எல்லைக் கனவளவு முரண் | 1,205,750 | பாதகமானது |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) விற்பனை விலை முரண். (02 புள்ளிகள்)

(ii) நேர் பொருள் விலை முரண். (02 புள்ளிகள்)

(iii) நேர் பொருள் கலவை முரண். (03 புள்ளிகள்)

(iv) நேர் பொருள் விளைவு முரண். (03 புள்ளிகள்)

(b) பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மையான பங்களிப்புடன் இணக்கம் செய்வதற்கான செயற்பாட்டுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட ஜஸ்ட் கம்பனி** வெவ்வேறு வகையான பொருள்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. **வரையறுக்கப்பட்ட ஜஸ்ட் கம்பனி** ஒரு புதிய இயந்திரத்தைப் பயன்படுத்தி **பொருள் 1X2** என்ற ஒரு புதிய பொருளை அறிமுகப்படுத்துவது பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளது. புதிய பொருளை அறிமுகப்படுத்துவதற்கு முன், கம்பனியானது ரூபா 2 மில்லியன் செலவில் சந்தை ஆய்வொன்றை செய்திருந்தது.

புதிய இயந்திரத்தின் கிரயம் ரூபா 80 மில்லியனாகவும் அதன் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வரி நோக்கத்திற்காக மூலதன விடுதொகைகள் (capital allowances) ஆண்டிற்கு 25% இல் கோரப்பட முடியும் என்பதுடன் கணக்கீட்டு நோக்கத்திற்காக தேய்மானமானது கிரயத்தில் நேர்கோட்டு முறையில் கணிக்கப்படுகிறது. தொழிற்படு மூலதன முதலீடு ரூபா 8 மில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

5 ஆண்டுகள் காலப்பகுதியில் கீழ்வரும் எண்ணிக்கையிலான அலகுகள் புதிய இயந்திரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது :

| ஆண்டு | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 24,000 |
| 2 | 27,000 |
| 3 | 32,000 |
| 4 | 32,000 |
| 5 | 28,000 |

முதலாவது ஆண்டில் பொருளை அலகொன்று ரூபா 3,600/- என்ற அறிமுக விலையில் அறிமுகஞ் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. 2 ஆவது ஆண்டில், அலகொன்றின் விலையை ரூபா 4,000/- ஆக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்னர், விலையை ஆண்டிற்கு 10% என்ற மதிப்பிடப்பட்ட பணவீக்கத்தின் அடிப்படையில் சீர்செய்ய வேண்டும்.

1 ஆவது ஆண்டில் அலகொன்றின் மாறும் உற்பத்திக் கிரயம் ரூபா 1,000/- ஆக இருப்பதுடன் அதன் பின்னர் இது ஆண்டொன்றிற்கு 10% அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தேய்மானம் உள்ளிட்ட நிலையான மேந்தலைகள் ஆண்டொன்றிற்கு ரூபா 45 மில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

1 ஆவது ஆண்டின் காலப்பகுதியில், ஆரம்ப சந்தைப்படுத்தல் காலகட்டத்தில் ரூபா 10 மில்லியன் செலவாகும் என எதிர்பார்க்கப்படுவதுடன் 2 ஆவது ஆண்டிலிருந்து விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்கள் ஆண்டிற்கான விற்பனை வருமானத்தில் 8% ஆக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கம்பனி ஆண்டிற்கு 30% இல் வருமான வரி செலுத்துவதுடன், அது அந்த ஆண்டிலேயே செலுத்தப்பட வேண்டும். கம்பனியின் மூலதனக் கிரயம் ஆண்டிற்கு 20% ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) முதலீட்டின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) கம்பனி, புதிய இயந்திரத்தைப் பயன்படுத்தி புதிய பொருளை அறிமுகப்படுத்த வேண்டுமா என்பதை **மதிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட நைட்ரோ கம்பனி** பல செயன்முறைகள் ஊடாக **பொருள் RX9** ஐ உற்பத்தி செய்கிறது. 2023 டிசெம்பர் மாதத்தில் **செயன்முறை 1** இற்கான உள்ளீடுகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது :

| | | |
|---|---|---|
| மூலப் பொருள் (17,500 கிலோகிராம்) | : | ரூபா 24,500,000/- |
| நேர் கூலி | : | ரூபா 14,700,000/- |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | : | ரூபா 11,025,000/- |

2023 டிசெம்பர மாத ஆரம்பத்தில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களுடன் 4,130 கிலோகிராம் ஆரம்ப புத்துருவாகும் வேலைகள் இருப்பில் இருந்தன :

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் | : | 100% பூர்த்தி, பெறுமதி ரூபா 4,761,715/- |
| நேர் கூலி | : | 70% பூர்த்தி, பெறுமதி ரூபா 2,189,745/- |
| மாறும் மேந்தலைகள் | : | 40% பூர்த்தி, பெறுமதி ரூபா 2,116,800/- |

ஆரம்ப புத்துருவாகும் வேலைகள் சராசரிக் கிரயத்தின் அடிப்படையில் கவனத்திற்கொள்ளப் படுகின்றன.

2023 டிசெம்பர் மாத இறுதியில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களுடன் 7,300 கிலோகிராம் இறுதிப் புத்துருவாகும் வேலைகள் காணப்பட்டன :

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் | : | 100% |
| நேர் கூலி | : | 60% |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | : | 30% |

மாத இறுதியில், 14,600 கிலோகிராம் **செயன்முறை 2** இற்கு மாற்றப்பட்டது.

உள்ளீட்டு மூலப்பொருளிலிருந்தான சாதாரண நட்டம் 5% ஆக இருப்பதுடன் சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதி (scrap value) கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 400/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் **செயன்முறை 1** கணக்கையும் **தயாரிக்குக.**

(14 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட ஸீனா கம்பனி** தமது ஆடை விற்பனையை அறிமுகப்படுத்தும் முறை பற்றி ஆராய்கிறது. இதனை இணையத்தளம் ஊடாகவோ அல்லது சிறிய கடை ஒன்றை அமைப்பதன் ஊடாகவோ செய்ய முடியும்.

இரண்டு தெரிவுகளுமே குறைந்த மட்ட, சராசரி மட்ட அல்லது உயர்ந்த மட்ட கேள்விகளைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இந்த இரண்டு தெரிவுகள் தொடர்பாகவும் கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

| **விற்பனை மட்டம்** | **இணையத்தளம்** | | **சிறிய கடை** | |
|---|---|---|---|---|
| | **நிகழ்தகவு** | **விற்பனை (அலகுகள்)** | **நிகழ்தகவு** | **விற்பனை (அலகுகள்)** |
| குறைந்த மட்டம் | 0.6 | 12,000 | 0.25 | 9,000 |
| சராசரி மட்டம் | 0.2 | 17,000 | 0.5 | 18,000 |
| உயர்ந்த மட்டம் | 0.2 | 24,000 | 0.25 | 26,000 |

அலகொன்றிற்கான விற்பனை விலை மற்றும் அலகொன்றிற்கான மாறும் கிரயம் என்பன முறையே ரூபா 1,000/- மற்றும் ரூபா 400/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இணையத்தளம் மற்றும் கடைக்கான வருடாந்த நிலையான கிரயங்கள் முறையே ரூபா 3,000,000/- மற்றும் ரூபா 8,000,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட ஸீனா கம்பனி** எந்தத் தெரிவினைப் பயன்படுத்த வேண்டும் என்பதை கணிப்பீடுகளின் ஆதரவுடன் **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |